செய்தி வெளியீடு எண். 180 நாள்: 17.04.2020

# கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியத்தில பதிவு செய்துள்ள பூசாரிகளுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.1000 வழங்கப்படவுள்ளது மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கிவரும் கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியத்தில பதிவு செய்துள்ள பூசாரிகளுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.1000 வழங்கப்படவுள்ளது. இந்த நிவாரணதொகை பூசாரிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்கு திருவள்ளூர் மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பூசாரிகள் உடனடியாக தங்களது பெயர், கைப்பேசி/தொலைப்பேசி எண், வங்கி கணக்குப் புத்தகத்தின முதல் பக்க விவரம், பூசாரிகள் நல வாரிய அடையாள அட்டை, ஆதார் அட்டை நகல் விவரம் ஆகியவற்றை திருவள்ளூர் சரகத்திற்குட்பட்ட திருக்கோயில்களைச் சார்ந்த கிராமக் கோயில் பூசாரிகள் திருவள்ளூர் சரக ஆய்வாளர் -9790839537, திருத்தணி சரகத்திற்குட்பட்ட திருக்கோயில்களைச் சார்ந்த கிராமக் கோயில் பூசாரிகள் திருத்தணி சரக ஆய்வாளர் - 9626438768, கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சரகத்திற்குட்பட்ட திருக்கோயில்களைச் சார்ந்த கிராமக் கோயில் பூசாரிகள் கும்மிடிப்பூண்டி சரக ஆய்வாளர் - 9444153112, மற்றும் திருவள்ளூர் மாவட்ட உதவி ஆணையர் அலுவலக தலைமை எழுத்தர் - 9677062918 ஆகிய வாட்ஸ் ஆப் எண் மூலமாகவோ, 044-27661738 என்ற அலுவலக தொலைபேசி எண் மூலமாகவோ தெரிவிக்கலாம் அல்லது இவ்விவரங்களை ac.tiruvallur@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். இது தொடர்பாக உதவி ஆணையர் அலுவலகத்திற்கு நேரில் வர தேவையில்லை என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.